கையொப்பத்தினை சான்றுப்படுத்தும் அதிகாரியின் கையொப்பம்

திகதி : ...................................
சான்றுப்படுத்தும் அதிகாரியின் முழுப்பெயர் : ..........................................................................
பதவி : ...............................................................................................................................
முகவரி : ............................................................................................................................
அலுவலக இலச்சினையினால் சான்றுப்படுத்துங்கள்

9. நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்தல் : (ஏற்கனவே அரசாங்க சேவையில் பணிபுரியும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே)

திரு./திருமதி/செல்வி .................................................................................................... ஆல் முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பிக்கிறேன்.இவர் இத்திணைக்களத்தில்/ அமைச்சில் நிரந்தர சேவையில் பணி புரிகிறார் எனவும், இப்பதவிக்கு ஏற்ற வகையில் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் எனவும், அவருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் உள்ளன /இல்லை என்றும், இப்பதவிக்கு தெரிவு செய்யப்படின் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது எனவும் தெரிவிக்கிறேன்.

.......................................................................
திணைக்களத் தலைவரின் அல்லது அதிகாரம்
கையளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம்

திகதி :.......................................
பதவி :..............................................................................................................................
திணைக்களம் / அமைச்சு : ..................................................................................................
அலுவலக இலச்சினையினால் உறுதிப்படுத்தவும்.

07-646

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி (சிங்களம்) – அம்பாந்தோட்டை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய மேலதிக முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. உரிய பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் / தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்திகள் உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.-** க. பொ. த. (சா./த.) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஒரு பாடம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு பாடமாக கருதப்படல் வேண்டும். அந்த பாடப் பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அந்தப் பாடம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவுக்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர், (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2025, ஓகத்து மாதம் 11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல.234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2025, யூலை 01.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| அம்பாந்தோட்டை | அம்பாந்தோட்டை | பந்தகிரிய குடியிருப்பு பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அம்பாந்தோட்டை |

07-672

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## நொத்தாரிசு இறுதிப் பரீட்சை - 2022

இங்கு பின்வரும் விண்ணப்பதாரர்களால் அவர்களது பெயருக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள மொழியில் நொத்தாரிசு மார்களாக கடமையாற்றுவதற்கு நொத்தாரிசு இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாக இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

| | | |
|---|---|---|
| 01. | திருமதி எஸ். எச். வருஷவித்தான | சிங்களம் |
| 02. | திருமதி ஈ. ஏ. டீ. டி. எதிரிசிங்ஹ | சிங்களம் |
| 03. | திருமதி எம். எம். ஜே. பேகம் | தமிழ் |
| 04. | திரு. இரவிந்திரன் கேசவன் | தமிழ் |
| 05. | திரு. எஸ். ஏ. சீ. ஏ. அஹமட் | தமிழ் |
| 06. | திருமதி கே. ஏ. எச். சந்திராணி | சிங்களம் |
| 07. | திரு. டி. எம். எச். எம். திசாநாயக்க | சிங்களம் |
| 08. | திரு. டீ. சேனாதீர | சிங்களம் |
| 09. | திரு. பீ. ஜே. திசாநாயக்க | சிங்களம் |
| 10. | திருமதி ஆர். பீ. டீ. ராஜபக்ஸ | சிங்களம் |
| 11. | திருமதி டி. எம். ஜீ. எஸ். திசாநாயக்க | சிங்களம் |
| 12. | திரு. வீ. விவேக்சந்திரன் | தமிழ் |
| 13. | திரு. ஆர். எம். யூ. கே. ரத்நாயக்க | சிங்களம் |
| 14. | திருமதி ஏ. பார்தீபன் | தமிழ் |
| 15. | திருமதி எல். பீ. தர்மரத்ன | சிங்களம் |
| 16. | திருமதி எச். எம். எஸ். ஹேரத் | சிங்களம் |

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2025, யூன் 30.

07-620

## அரசாங்க சேவை ஆணைக்குழு

## முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிவிசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2025

1. முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிவிசேட தரத்துக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் எழுத்துப் போட்டிப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2025, ஒற்றோபர் மாதம் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தரப்படுகின்றது. அதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன் விண்ணப்பப்படிவங்களை முன்வைக்க முடிவது நிகழ்நிலையினூடாக (Online) மட்டுமே ஆகும். விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2025, ஓகத்து மாதம் 11 ஆகும்.

**குறிப்பு** - நிகழ்நிலையினூடாக விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்வது 2025, யூலை மாதம் 14 ஆந் திகதி மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதுடன் 2025, ஓகத்து மாதம் 11 ஆந் திகதி பி.ப 9.00 மணிக்கு முடிவடையும்.

2. இப் பரீட்சைக்குரிய பரீட்சை நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கும் நகரங்கள் மற்றும் அதற்குரிய நகரங்களின் இலக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| பதுளை | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |

மேலே குறிப்பிடப்பட்ட ஏதேனும் நிலையம் ஒன்றுக்கான விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை போதியளவானதாகக் காணப்படாதுவிடின் மேற்படி பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு மேற்படி விண்ணப்பதாரிகள் அருகிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு மாற்றப்படுவார்கள். விண்ணப்பிக்கும் நகரத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. மேலும் உத்தேசிக்கப்பட்ட நகரங்கள் அனைத்திலும் அல்லது அதிக எண்ணிக்கையில் பரீட்சை நிலையங்களை அமைப்பதற்குப் போதிய அளவு விண்ணப்பதாரிகள் காணப்படாது விடத்து பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

3. இப் பரீட்சையினை பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைய பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

4. இப் போட்டிப் பரீட்சை அல்லது இப் பரீட்சைக்கு சமாந்திரமாக நடைபெறும் திறமை அடிப்படையில் முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் சேவையின் அதிவிசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை ஆகிய இரண்டில் முதலில் நடைபெறும் போட்டிப் பரீட்சையின், பரீட்சை நடைபெறும் இறுதித் திகதிக்கு முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் சேவையின் அதிவிசேட தரத்தில் நிலவும் வெற்றிடங்களில் 50% இப் போட்டி பரீட்சையின் ஊடாக பூர்த்தி செய்யப்படும். அவ் வெற்றிடங்களுக்குரிய பரீட்சையின் இறுதித் திகதிக்கு பின்னர் அறிவித்தலின் மூலம் பிரசித்தப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் அவ்வாறு பிரசித்தம் செய்ததன் பின்னர் வெற்றிடங்களின் அளவு மீண்டும் திருத்தம் செய்யப்படாது.

5. 2025.03.25 ஆம் திகதிய மற்றும் 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றிக்கையின் MN 7-2025 சம்பளக் குறியீடு இவ் பதவிக்கு உரித்தாவதுடன் அதற்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 71,240.00 - 11x1,360 - 18x1,850 - 119,500.00 ரூபா ஆகும். இச் சம்பளம் உங்களுக்கு உரித்தாவது 2027.01.01 ஆந் திகதி தொடக்கமாகும். நியமனம் செயல்வலுப்பெறும் தினம் தொடக்கம் குறித்த சுற்றறிக்கையின் உப அட்டவணை III இன் ஏற்பாடுகளின் படி உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.

6. **பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகைமைகள்** :

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிராத இணைந்த சேவைக்குரிய,

(அ) முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் I இன் உத்தியோகத்தராக இருத்தல்

அல்லது

(ஆ) குறைந்தபட்சம் சேவையில் 08 வருடங்களுக்கு குறையாத முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் II இலுள்ள உத்தியோகத்தராக இருத்தல்

அல்லது

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டத்தினைப் பெற்றுள்ள முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் 05 வருட முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தராக இருத்தல்

மற்றும்

(ஈ) உரிய திகதியில் குறித்த வினைத்திறன் காண் பரீட்சையை முழுமைப்படுத்தியிருத்தல்.

குறிப்பு I

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் தற்போதுள்ள தரத்திற்கு ஏற்ப மேற்படி (அ), (ஆ), (இ) இன் மூலம் காட்டப்பட்டுள்ள முனைப்புடனான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள தற்போதுள்ள தரத்திற்குரித்தாக சித்தியெய்த வேண்டிய வினைத்திறன்காண் பரீட்சையை முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைய முழுமைப்படுத்தப்பட வேண்டிய தடவைகளின் எண்ணிக்கையினுள் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு சித்தியெய்துள்ள ஆனால் நிர்வாக காரணங்களின் அடிப்படையில் குறித்த வினைத்திறன் காண் சலுகை தாமதமடைந்துள்ளதன் காரணமாக சேவையில் உறுதிப்படுத்தல் அல்லது பதவியுயர்த்தல் அல்லது விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு இழக்கப்படுவதன் காரணமாக மாத்திரம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் முழுமைப்படுத்துவதற்கு முடியாமற் போன உத்தியோகத்தர்களும், இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

குறிப்பு II

எனினும், அவ் உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பிப்பதற்கோ பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப் படுவது பதவியுயர்வினைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையாகாது என்பதுடன், அதிவிசேட தரத்துக்கு பதவியுயர்த்தப்படும் கடிதம் வழங்கப்படுவது உரியவகையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளதாக திருப்திப்பட்டு குறித்த பதவியில் உறுதிப்படுத்தல் / தரவுயர்வினை பெற்றதன் பின்னராகும்.

7. **பரீட்சை நிபந்தனைகள்** :

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் விரும்பும் ஒரு மொழியில் பரீட்சைக்கு தோன்ற முடியும். பரீட்சார்த்திகள் இவ் பரீட்சையின் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழிமூலத்திலே விடையளித்தல் வேண்டும். பரீட்சார்த்தியொருவருக்கு தம் விண்ணபப்பபடிவத்தில் காட்டப்படும் பரீட்சை மொழி மூலத்தை மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் சகல வினாப்பத்திரங்களுக்கும் தோன்றுதல் வேண்டும்.

(ii) நிகழ்நிலை (online) பரீட்சை விண்ணப்படிவம் ஆங்கில மொழியில் பூர்த்தி செய்தல் வேண்டும். சிங்களம் அல்லது தமிழில் பூர்த்தி செய்ய ஆலோசனை வழங்கியுள்ள பகுதிகளை மட்டும் சரியாக அவ் மொழிகளில் பூர்த்தி செய்தல் வேண்டும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்வதற்கு முன்பு பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்காக தயாரித்துள்ள பொது ஆலோசனை பத்திரத்தினை (Common Instructions) தரவிறக்கம் செய்து, வாசித்து, விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும் போது அவ் ஆலோசனைகளை கடுமையாக பின்பற்றுதல் வேண்டும். பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

(iii) உத்தியோகத்தர் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தமது தனியாள் கோவையில் கோப்பிடுவதற்காக தனது நிறுவனத் தலைவருக்கு வழங்கவேண்டுமென்பதுடன், நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரின் ஊடாக சான்றுரைப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

(iv) பரீட்சைக் கட்டணம் 1200.00 ஆகும். முதற் தடவையாக இப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. முதற்தடவையாக தோற்றும் விண்ணப்பதாரிகளெனக் கருதப்படுவது பொது எழுதுவினைஞர் சேவையில் அதிவிசேட வகுப்பிற்கு நியமனம் பெறுவதற்காக 1980, 1982, 1983, 1984, 1985, 1986, 1987, 1988, 1989, 1991, 1996, 1999 அல்லது 2001 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றாத விண்ணப்பதாரர்கள் மற்றும் 1985 மற்றும் 1996 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட அரச தட்டெழுத்தாளர் சேவையின் அதிவிசேட வகுப்பின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றாத விண்ணப்பதாரர்கள் மற்றும் 1996 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அரச சுருக்கெழுத்தாளர் சேவையின் அதிவிசேட வகுப்பின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றாத விண்ணப்பதாரர்கள் மற்றும் 1999 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அரச கணக்குப்பதியுநர் சேவையின்/அரச சிறாப்பர் சேவையின் அல்லது அரச களஞ்சியப் பொறுப்பாளர் சேவையின் அதிவிசேட வகுப்பின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு மற்றும் 2006, 2007, 2011,2015, 2018 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிவிசேட வகுப்புக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் ஒரு பரீட்சைக்கேனும் தோற்றாத விண்ணப்பதாரர்கள் மட்டுமே ஆவர்.

* பரீட்சைக்கு விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்து பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைத்ததன் பின்னர் ஏதேனும் காரணத்தின் மீது பரீட்சைக்கு தோன்றாது இருப்பினும் விண்ணப்பதாரர்கள் இப் பரீட்சையின் கட்டணங்களை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

* முதல் தடவை பரீட்சையில் தோற்றுவதாக பொய்யுறைத்து கட்டணம் செலுத்தாமல் இப்பரீட்சைக்குத் தோற்றி, இதைப்பற்றி பின்னர் தெரியவரும்போது எடுக்கப்படும் நடவடிக்கைகள் மூலமாக கிடைக்கும் பாதகமான விளைவுகளை அலுவலரும் நிறுவனத் தலைவரும் பொறுப்பேற்க வேண்டும்.

கட்டணத்தை செலுத்தும் போது நிகழ்நிலை கட்டமைப்பினூடாக வழங்கப்படும் கீழ்வரும் கட்டண செலுத்துகை முறையின் கீழ் மட்டும் கொடுப்பனவினை செய்தல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கியினதும் கடனட்டை மூலம் (Any Bank Credit Card)
ii. எந்தவொரு வங்கியினதும் செலவட்டை மூலம் (Any Bank Debit Card)
iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமையின் மூலம் (Bank of Ceylon Online Banking Method)
iv. எந்தவொரு இலங்கை வங்கியின் கிளைகளினூடாகவும் (Bank of Ceylon Teller Slip Payment)

குறிப்பு : மேற்கூறப்பட்ட முறைமையின் ஊடாக கொடுப்பனவு செய்யப்படும் முறைமை தொடர்பில் ஆலோசனைகள் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப ஆலோசனைகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(v) கொடுப்பனவு கிடைக்கப் பெற்றதென குறுந்தகவலொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் தகவலொன்றின் (Email) மூலம் அறியத்தரப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுப் பணமும் செலுத்த வேண்டியதுடன் பரீட்சைக் கட்டணத்தை குறைவாகவோ அல்லது அதிகமாக செலுத்தியுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு முறைமையின் மூலம் பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது ஏற்படும் குறைபாடுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சை திணைக்களம் பொறுப்பாகாது.

(vi) பரீட்சைக்காக செலுத்தப்படும் பணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீள செலுத்த அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றப்படமாட்டாது.

(vii) பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையெழுத்தினை தாபனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் சான்றுரைப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளனர் என்ற முன் நிபந்தனையின் மீது விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சை கட்டணத்தை செலுத்தி விண்ணப்பப்படிவங்களை சரியாக நிகழ்நிலையினூடாக சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களிடம் பரீட்சை ஆணையாளரால் நிகழ்நிலையினூடாக மட்டும் பரீட்சை அனுமதிப் பத்திரம் வெளியிடப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் வெளியிடப்பட்ட

உடன் அதனை குறிப்பிட்டு அறிவித்தலொன்றை இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன் விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ் செய்தியினூடாக அறிவிக்கப்படும். தமது அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாத பரீட்சாத்தியொருவர் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்படும்படி அது தொடர்பில் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் விலாசத்தினை சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பிற்கு வெளியே வசிப்பவராயின், அவ் தகவல்களுடன் தொலைநகலினூடாக பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை விரைவாக பெறுவதற்கு இயலுமான வகையில் விண்ணப்பதாரரின் தொலைநகல் எண்ணையும் குறிப்பிட்ட கோரிக்கை கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தொலைநகல் எண்ணிற்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாகும். அவ்வாறு விசாரிக்கும் போது இலங்கைப் பரீட்சை திணைக்களத்தினால் விசாரிக்கும் ஏதேனும் தகவலொன்றை உறுதிப்படுத்துவதற்காக தம்மிடம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதியினையும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்திருப்பதும் பிரயோசனமானது.

8. **பரீட்சைக்கு அனுமதித்தல்:**

(அ) பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் முதலில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தை பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்தில் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்காகத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் கையாள வேண்டிய விதிக்கோவை ஒன்று இவ் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்படுகின்றது. பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச் சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும்.

குறிப்பு : பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரத்தை வெளியிடுதல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அவ் அறிவித்தலின் 06வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக ஏற்றுக் கொள்ளுதலாக கருதப்படமாட்டாது.

9. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்:**

பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும். அதற்காக பின்வரும் ஆவணங்கள் மட்டும் செல்லுபடியாகும் :

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ;
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் உபகரணங்கள் ஏதும் பாவிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்பத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளங் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

10. **பொய்யான தகவல்களை அளிப்பதற்கான தண்டனைகள் :**

(அ) இப் பரீட்சைக்குரிய ஒழுங்கு விதிகளின் படி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் அதற்குத் தோற்றுவதற்கு தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச் சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் அளித்துள்ள தகவல்கள் பிழையானவை எனப் பிற்காலத்தில் தெரியவந்தால் அல்லது வேண்டுமென்று ஏதேனும் ஒரு விடயத்தை மூடிமறைத்திருப்பதாக வெளிவந்தால் அவர் தரமுயர்வு பெறுவதற்காக கவனத்திற்கொள்ளப்படமாட்டார் என்பதுடன் இப் பரீட்சை காரணமாக வழங்கப்பட்டுள்ள ஒரு தரமுயர்வை இல்லாதொழிக்கவும் அல்லது அரச சேவையின் பதவி நீக்கத்திற்கும் ஆளாவார்.

11. **பரீட்சை நடைமுறை**: எழுத்துப் பரீட்சை கீழ்க் குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கியதாகும்.

| *இல.* | *வினாத்தாள்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01 | அலுவலக முகாமை | 2 மணித்தியாலம் | 100 |
| 02 | அலுவலக முறைமை | 2 மணித்தியாலம் | 100 |
| 03 | தாபனச் செயற்பாடுகள் மற்றும் செயலொழுங்கு விதிகள் | 2 மணித்தியாலம் | 100 |
| 04 | அரச நிதி முகாமை | 2 மணித்தியாலம் | 100 |
| 05 | பொது வினாத்தாள் | 1 ½ மணித்தியாலம் | 100 |

12. **பாடத் திட்டம் :**

மேற்கூறப்பட்ட பாடங்களுக்குரிய பாடவிதானம் கீழ்வரும்படியாகும்.

(i) அலுவலக முகாமை (காலம் -02 மணித்தியாலம் புள்ளிகள் - 100)

ஒழுங்குக் கட்டமைப்பு, ஒழுங்கமைப்பு தொடர்பான அடிப்படைகள், பணிப் பகுப்பாய்வு, பணி மதிப்பீடு, தலைமைத்துவம், மேற்பார்வை, தீர்மானம் எடுக்கும் ஆற்றல், தொடர்பாடல், மக்கள் தொடர்பு, ஒருங்கிணைப்பும் மற்றும் முரண்பாட்டுத் தீர்வு.

(ii) அலுவலக முறைமை ( 02 மணித்தியாலங்கள், புள்ளிகள் 100)

அலுவலக முறைமைகள் பற்றிய அடிப்படைகள், அலுவலக நடைமுறைகள், ஆவணங்கள் மற்றும் கோவைப்படுத்தல், மாதிரிப் படிவங்களை திட்டமிடல், கடிதங்களைப் பரிமாறுதல், அலுவலக உபகரணங்களின் பயன்பாடு பற்றிய கட்டுப்பாடு, அலுவலக தளக்கோலம் மற்றும் சுற்றுப்புறம், தொழில் விபரம், பணி ஆய்வு மற்றும் முறைமை ஆய்வு, பணி அளவீடு, அலுவலகச் செயற்பாட்டுக் கைந்நூல்.

(iii) தாபனச் செயற்பாடுகள் மற்றும் செயலொழுங்கு விதிகள் ( 02 மணித்தியாலங்கள், புள்ளிகள் - 100)

அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் போது பின்பற்றவேண்டிய நடைமுறைகள், அரச அலுவலர்களின் தாபனச் செயற்பாடுகள், தனிப்பட்ட கோவைகளின் பராமரிப்பு. அரச ஊழியர்களை நியமனம் செய்தல், இடமாற்றம், தரவுயர்வு வழங்கல், சேவையை முடிவுறுத்தல் ஆகிய பணிகளுக்கான அதிகாரங்களை ஒப்படைத்தல், நலனோம்பல், அரசாங்க அலுவலர்களுக்கு உரித்தான சிறப்புரிமைகள், தாபனச் செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கத்தினால் இதுவரை வெளியிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள், சுற்றறிக்கைகள் தொடர்பான பொதுவான தெளிவு பரீட்சிக்கப்படும்.

(iv) அரச நிதி முகாமை ( காலம் 02மணித்தியாலங்கள், புள்ளிகள் 100)

வருடாந்த மதிப்பீடுகளையும் கணக்குகளையும் சமர்ப்பிக்கும் அலுவலர் ஒருவரின் பொறுப்புக்கள், நிதிக் கட்டுப்பாடு, நிதிப் பொறுப்புக்களை ஒப்படைத்தல், நிதியினைப் பொறுப்பேற்றல், கணக்குப் பதிவும், மீளப் பெறுதலும், செலுத்தல்கள், அரச நிதிப் பொறுப்பு, முற்பணம் மற்றும் வங்கிக் கணக்குகள், வழங்கல்களும் சேவைகளும், பெறுகைச் செயற்பாடுகள், பொருட்தொகை மதிப்பீடு, கணக்காய்வு விசாரணைகள், அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் பேரேடுகள், வருமான செலவுச் சுருக்கம், வங்கிக் கணக்கிணக்கக்கூற்றுக்கள் மற்றும் நிதிக் கட்டுப்பாட்டுப் புத்தகங்கள், அரச நிதிப் பயன்பாடு தொடர்பில் இதுவரை வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பான பொதுவான அறிவு பரீட்சிக்கப்படும்.

(v) பொது வினாத்தாள் (காலம் 1 1/2 மணித்தியாலங்கள், புள்ளிகள் 100)

அரசாங்க நிர்வாகத்தின் இயல்புகள், அரசாங்க நிர்வாகத்தின் கட்டமைப்பு, அரசாங்கத்தின் கொள்கைகளும் புதிய அரச மறுசீரமைப்பு, அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள், மனித உரிமைகள் ஆணைக்குழு, குறைகேள் அதிகாரி (ஒம்பூட்ஸ்மன்), பாராளுமன்ற பொதுமக்கள் முறைப்பாட்டுச் செயற்குழு, அலுவலக கலாசாரம், தொழில்சார் ஒழுக்கங்களும் நல்லொழுக்கங்களும், அலுவலகத்திலுள்ள பௌதீக வளங்களைச் சிறந்த முறையில் வடிவமைத்தலும் ஊழியர் குழாத்தினரின் நலனோம்பல் செயற்பாடுகளும், பதவி அந்தஸ்து மற்றும் சிவில் அந்தஸ்து தொடர்பாக சமூக விஞ்ஞான ரீதியான அங்கீகாரம், சேவைபெறுநர்களுக்கு அரசாங்க அலுவலர்கள் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள்.

13. **நியமனத்திற்காக தெரிவு செய்தல்:**

I. இப் பரீட்சைக்கு உரிய நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 40 புள்ளிகளையாகிலும் பெற்றுக் கொள்ள வேண்டும். பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு ஏற்ப தயாரிக்கப்படும் திறமை ஒழுங்கிற்கு ஏற்ப அதிகமான புள்ளிகளைப் பெற்ற, மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கையினைப் போன்று 10% என்ற இரண்டினதும் கூட்டுத்தொகைக்கு சமனான விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கைக்கு தகைமைகளை பரீட்சிப்பதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை குழுவிற்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப்பரீட்சை விண்ணப்பதாரிகளின் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களை பரீட்சிப்பதற்காக மட்டுமேயாகும் நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. தேர்ந்தெடுக்கப்படுகின்ற பரீட்சார்த்திகள் வெற்றிடங்கள் நிலவும், இத்தீவின் எப் பிரதேசத்திலேனும் அமைந்துள்ள அலுவலகம் ஒன்றில் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும். இணைப்புச் செய்யப்படும் அலுவலகத்தில் நியமனத்தை ஏற்க மறுத்தால் அவரின் நியமனத்தை இரத்துச் செய்து அடுத்ததாக தகைமையுடையவர்களை ஒழுங்கு வரிசையாக அழைத்து வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

II. திறமை ஒழுங்குவரிசையின்படி வெற்றிடங்களை நிரப்பும் போது ஏதேனும் சந்தர்ப்பத்தில் மிகுதியாகவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதிகமான எண்ணிக்கையொன்றுக்கு சமமான புள்ளிகளைப் பெற்று தகைமை பெற்ற பரீட்சாத்திகள் இருப்பின் மற்றும் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான சேவை தேவைப்பாடொன்று தற்காலத்தில் நிலவுகின்றதெனில், அவ்வாறு சமமான புள்ளிகளைப் பெற்ற பரீட்சாத்திகளில் இருந்து மேலதிகமாக தெரிவு செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்க முடியும். இத் தெரிவு செய்யும் நடைமுறை கீழ்வரும்படி இரு பகுதிகளைக் கொண்டது.

(i) பரீட்சாத்திகளின் திறமையினை மதிப்பிடுவதற்காக எழுத்துப் பரீட்சை
(ii) திறனை அடிப்படையாகக் கொண்ட நேர்முகப் பரீட்சை

எழுத்துமூலமான பரீட்சை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதியளிக்கப்படுகின்ற நிறுவனத்தின் மூலம் நடாத்தப்படும்.

நேர்முகப் பரீட்சைக் குழு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும். இத் தெரிவு செய்யும் நடைமுறை கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் தொடர்பில் மேலதிக தகவல்கள் www.psc.gov.lk இன் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் கீழ்வரும் இணையப்பக்கத்தில் வெளியிடப்படும்.

முதல் பக்கம் → தரவிறக்கம் → நடைமுறைகள் → விசேட தெரிவு நடைமுறை

III. மட்டுப்படுத்தப்பட்ட போட்டி பரீட்சையின் மூலம் பதவியுயர்வு பெற்ற விண்ணப்பதாரர் பதவியுயர்வு கடிதம் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து பஞ்சாங்க மாதமொன்றுக்குள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட சேவை நிலையத்தின் கடமைக்காக அறிக்கையிடாதிருத்தல், அப் பதவி உயர்வினை செல்லுபடியற்றதாக்குவதற்கு காரணமான விடயமாக கருதப்படுவதுடன் அவ் உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ள அதிவிசேட தரத்தின் பதவியுயர்வினை மீண்டும்

விசாரணையின்றி செல்லுபடியற்றதாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அது தொடர்பில் நடைபெறும் மேன்முறையீட்டினை கவனத்திற் கொள்ளாது நிராகரிப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

IV. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் ஒரு தினம் முதல் இந் நியமனம் செயல்வலுப்பெறும்.

V. முதல் நியமனம் கிடைக்கப்பெற்ற நிலையத்தில் குறைந்த பட்சம் 03 வருடம் கட்டாய சேவையில் ஈடுபடுதல் வேண்டும். எவ்வாறு இருந்தபோதிலும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதாவது விசேட காரணத்தினால் அக் காலம் முடிவடைவதற்கு முன்னர் எவரேனும் ஒரு அலுவலரை இடமாற்றம் செய்வதற்கு அவசியப்படுமாயின், நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் உண்டு.

VI. எழுத்துப் பரீட்சையின் மூலம் நேர்முகப் பரீட்சைக்கு தகைமையினைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்களின் பெயர்களை உள்ளடக்கிய பெறுபேற்று அட்டவணை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவிப்புக்கமைய பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரிடம் பெற்றுக்கொடுப்பதோடு ஏனைய விண்ணப்பதாரர்களின் பெறுபேறுகள் www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடுதல் அல்லது தனிப்பட்ட முகவரிக்கு அனுப்புவது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் செய்யப்படும்.

14. பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவார்கள். அச் சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாக வேண்டி ஏற்படும்.

15. அரசாங்க சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் 1840/34 ஆம் இலக்க 2013, திசெம்பர் மாதம் 11 ஆந் திகதிய அரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதித்துரைக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அப் பிரமாணக் குறிப்பின் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் திருத்தத்திற்கும் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள ஏதேனும் திருத்தத்திற்கும் அமைய இப்பரீட்சையை நடாத்துதல் மற்றும் அதிவிசேட தரத்துக்கு பதவியுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

16. குறிப்பிட்ட வெற்றிட எண்ணிக்கையை அல்லது எல்லா வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கும், இவ் ஒழுங்கு விதிகள் மூலம் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பாக ஏதேனும் தீர்மானம் எடுப்பதற்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

17. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

எஸ்.ஆலோகபண்டார,
செயலாளர்.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2025, யூலை 03.

07-663

## திருத்தம்

### கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் (இணை அலுவலர் சேவை வகை) கடற்றொழில் அலுவலர் தரம் III இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை 2024/2025

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் (இணை அலுவலர் சேவை வகை) கடற்றொழில் அலுவலர் தரம் III இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பது தொடர்பாக விண்ணப்பங் கோரும் அறிவித்தல் இலக்கம் 2443 உடைய 2025.06.27 ஆந் திகதிய வர்த்தமானியில் மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டது. அந்த வர்த்தமானி அறிவித்தலின் இலக்கம் 02 பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படுகின்றது என்பதை தயவுடன் தெரிவிக்கின்றேன்.

02. சம்பள வகை மற்றும் அளவுத்திட்டம் :

சம்பளக் குறியீட்டு இலக்கம் : MN 4-2025

சம்பள அளவுத்திட்டம் : ரூபா 53,060.00 - 10 x 800 - 11 x 1,190 - 10 x 1,320 - 5 x 1,350 - ரூபா 94,100.00

07-643

---

## திருத்தம்

### கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவத உதவியாளர் (தொழில்நுட்பம்) கடற் பொறியியல் உதவியாளர் தரம் III (தொழில்நுட்ப சேவை) இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை 2024/2025

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவத உதவியாளர் (தொழில்நுட்பம்) கடற் பொறியியல் உதவியாளர் தரம் III (தொழில்நுட்ப சேவை) இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பது தொடர்பாக விண்ணப்பங் கோரும் அறிவித்தல் இலக்கம் 2443 உடைய 2025.06.27 ஆந் திகதிய வர்த்தமானியில் மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டது. அந்த வர்த்தமானி அறிவித்தலின் இலக்கம் 02 பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படுகின்றது என்பதை தயவுடன் தெரிவிக்கின்றேன்.

02. சம்பள வகை மற்றும் அளவுத்திட்டம் :

சம்பளக் குறியீட்டு இலக்கம் : MN 3-2025

சம்பள அளவுத்திட்டம் : ரூபா 52,250.00 - 10 x 800 - 11 x 1,190 - 10 x 1,320 - 10 x 1,350 - ரூபா 100,040.00

07-644

---

## திருத்தம்

### கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் கனிஷ்ட வானொலி அலுவலர் தரம் III இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை 2024/2025

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் கனிஷ்ட வானொலி அலுவலர் தரம் III இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பது தொடர்பாக விண்ணப்பங் கோரும் அறிவித்தல் இலக்கம் 2443 உடைய 2025.06.27 ஆந் திகதிய வர்த்தமானியில் மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டது. அந்த வர்த்தமானி அறிவித்தலின் இலக்கம் 02 பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படுகின்றது என்பதை தயவுடன் தெரிவிக்கின்றேன்.

02. சம்பள வகை மற்றும் அளவுத்திட்டம் :

சம்பளக் குறியீட்டு இலக்கம் : MT 1-2025

சம்பள அளவுத்திட்டம் : ரூபா 50,090.00 - 10 x 540 - 11 x 630 - 10 x 1,010 - 10 x 1,190 - ரூபா 84,420.00

07-645

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.